**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்</u>**

**<u>O.S.No.283/2023</u>**

01.04.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திரு.ராமன் Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 முத்துராஜ் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1, 2 பிரதிவாதிகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1993ம் வருடம் திருமணம் நடந்தது. அப்போது எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 21 வயதுக்கு மேல் இருக்கும். 1,2 பிரதிவாதிகளுக்கு நடைபெற்ற திருமணம் காதல் திருமணமா என்றால் இல்லை, பெரியவர்கள் ஏற்பாடு செய்த திருமணம். 2ம் பிரதிவாதிக்கு சீர்வரிசையாக எத்தனை பவுன் நகை போட்டேன் என்றால் என் தந்தை 15 பவுன் நகை போட்டார். பிரதிவாதிகள் காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டார்கள் என்றும் அதனால் திருமணத்தின் போது அவர்களுக்கு சீர்வரிசை எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு திருமணம் நடைபெற்ற போது நான் மைனராக இருந்தேன் என்றும் அதனால் எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயார் எந்த வருடம் இறந்தார் என்றால் 2019ம் வருடம் இறந்தார். என் தந்தை இறந்தபிறகு சுமார் 9 ஆண்டுகள் நிலம் அனைத்தும் என் அம்மாவின் கட்டுப்பாட்டில் இருந்தது என்றால் சரியல்ல. என் தந்தை இறந்த பிறகு பிரதிவாதிகள் ஆவணங்கள் உருவாக்க முயற்சிசெய்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். எந்த ஆண்டு அவ்வாறு பிரதிவாதிகள் ஆவணங்கள் உருவாக்க முயற்சிசெய்தார்கள் என்றால் 2018ம் ஆண்டு பாண்டு உருவாக்கினார்கள். அந்த பாண்டு ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் பாண்டு ஏற்படுத்தினார்கள் என்ற விவரம் எனக்கு யார் மூலம் தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் அந்த

பாண்டு ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தார்கள், அதன் மூலம் தான் எனக்கு தெரியும். அந்த பாண்டு ஆவணத்தின் நகல் பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் மீது நீதிமன்றத்தில் தவறான கருத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் நான் இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் பிரதிவாதிகள் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிசெய்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் எவ்வாறு சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிசெய்தார்கள் என்றால் பிரதிவாதிகள் என்னிடம் வந்து நான் கடன் வாங்கி பாண்டு எழுதி கொடுத்துள்ளதாகவும் பணம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டார்கள், மேலும் நிலத்தை ஓட்டவந்தார்கள். அந்த சமயத்தில் இந்த பிரச்சனை குறித்து ஊரில் பெரியவர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடந்ததா என்றால் இல்லை, போலிசில் தான் புகார் கொடுத்தேன். 25.05.2023ல் சட்டவிரோதமாக பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்ச்சி செய்ததை நான் தடைசெய்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் ஆமாம். நான் சொல்வது போல 25.05.2023ல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக ஜோடனை செய்து இவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. எந்த காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 2022ம் வருடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் வளவனூர் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன். அந்த புகார் நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது என் தந்தை எழுதிவைத்ததாக கூறும் உயில் ஆவணத்தின் நகலை புகாருடன் இணைத்து கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் சொல்வது போல மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் வளவனூர் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தபோது அதனுடன் உயில் நகலை இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை இறந்தபிறகு 2 ஆண்டுகள்

என் தாயார் பூமியை 1ம் பிரதிவாதியின் மூலமாக உழவு செய்துவந்தார் என்றால் சரியல்ல. 2 ஆண்டுகளுக்கு பிறகு எனக்கு திருமண ஏற்பாடு செய்தபோது நான் விவசாயம் செய்ய விரும்பவில்லை என்றும் பைனான்ஸ் தொழில் செய்ய விரும்புகிறேன் என்றும் கூறி அதனால் அந்த நிலத்தை போக்கியத்திற்கு விட்டு பணத்தை கொடுங்கள் நான் பைனான்ஸ் செய்கிறேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்திலேயே 2ம் பிரதிவாதி என் தாயாரிடம் சொத்தில் பாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. மாம்பாக்கம் வீரன் மகன் நாகராஜன் என்பவரை தெரியுமா என்றால் அவர் என் நிலத்தில் வேலை செய்கிறார். நான் மேற்சொன்ன நாகராஜன் என்பவரிடம் 2010ம் ஆண்டு 3 தவணைகளாக ரூ.6,25,000/- பணம் போக்கியத்தொகையாக பெற்றுக்கொண்டு ஆவணம் எழுதிகொடுத்தேன் என்றால் சரியால்ல. மேற்படி தொகையை 1ம் பிரதிவாதி தான் வாங்கிகொடுத்தார் என்றால் சரியல்ல. குத்தகைக்கு பெற்ற நாகராஜன் 2 ஆண்டுகளுக்கு பிறகு தன்னால் விவசாயம் செய்யமுடியவில்லை என்றும் அதனால் அவர் கொடுத்த தொகையை திருப்பி கொடுக்கும் படி என்னிடம் கேட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த தொகையை 1ம் பிரதிவாதி மேற்படி நாகராஜன் என்பவருக்கு திருப்பி கொடுத்துவிட்டு 2012 முதல் தற்போது வரை 1ம் பிரதிவாதி தான் பூமியை ஓட்டிவருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் தேதி நான் தக்க சாட்சிகள் முன்னிலையில் போக்கிய பத்திரத்தை புதுப்பித்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. வளவனூர் காவல் நிலையத்தில் 20.04.2023 தேதியில் நான் புகார் கொடுத்தேன் என்றால் அது எனக்கு கவனத்தில் இல்லை. மேற்படி புகார் மீது விசாரணை நடந்த சமயத்தில் நான் சொத்து என்னுடையது என்று சொல்லவில்லை என்றும் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளதை மீட்டுக்கொடுக்கவேண்டும் என்று தான் கேட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. வளவனூர் காவல் நிலையத்தில் சரிவர விசாரணை செய்யவில்லை

என்று கூறிதான் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்மீது விசாரணை செய்த வளவனூர் போலிசார் என்னிடம் போக்கியத்திற்கு பெற்றுக்கொண்ட தொகையை திருப்பி கொடுத்துவிடுங்கள் என்றும் சொத்தில் பாகத்தை கொடுத்துவிடுங்கள் என்றும் கூறினார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு தான் என் தந்தை உயில் எழுதிவைத்துள்ளதாக கூறி ஒரு ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. என் தந்தை உயில் எழுதிவைத்ததாக கூறும் சமயத்தில் நான் பக்கத்தில் இருந்தேனா என்றால் நான் பக்கத்தில் இல்லை, நிலத்தில் இருந்தேன். என் தந்தை உண்மையிலேயே உயில் எழுதிவைத்திருந்தால் அதை சட்டப்படி பதிவு செய்து இருப்பார் என்றால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக இந்த வழக்கில் மூல ஆணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், என் தந்தை கிரையம் வாங்கிய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அந்த அசல் கிரையபத்திரம் வங்கியில் அடமான கடனுக்காக வைக்கப்பட்டுள்ளது. எந்த வங்கியில் அசல் கிரையபத்திரம் வைப்பீடு செய்துள்ளேன் என்றால் ராம்பாக்கம் இந்தியன் வங்கியில் என் தந்தை சம்மதத்தின் பேரில் அடமான கடனுக்காக அசல் கிரைய பத்திரத்தை கொடுத்துள்ளேன். அசல் கிரையபத்திரம் வங்கியில் உள்ளது என்று இந்த வழக்கிலும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எந்த தேதியில் இந்தியன் வங்கியில் அடமான கடன் வாங்கினேன் என்றால் 2004 அல்லது 2005ம் ஆண்டு கடன் வாங்கினேன். அந்த கடன் தற்போது எந்த நிலையில் உள்ளது என்றால் கடன் தொகையை செலுத்துவதற்கு அவகாசம் கேட்டுள்ளேன். எவ்வளவு தொகை எந்த நோக்கத்திற்காக கடன் வாங்கினேன் என்றால் பைப்லோன் மற்றும் கரும்பு பயிர் செய்ய கடன் சுமார் ரூபாய் 4 லட்சம் வாங்கினேன். அது இப்போது ரூபாய் 15 லட்சமாக உள்ளது. நான் சொல்வது போல வங்கியில் எந்த கடனும் இல்லை என்றும் வங்கியில் கடன் பெற்றதாக

நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் மற்றொரு சகோதரி பார்வதி என்பவர் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். மேற்படி பார்வதி என்பவரின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் யாரும் என்னிடம் பிரச்சனை செய்யவில்லை. எனக்கு மற்றொரு சகோதரி வாசுகி என்பவர் இருந்தார் என்றும் அவருக்கு கடலூர் வண்டிபாளையம் கிராமத்தில் ஒருவருடன் திருமணம் செய்துகொடுக்கப்பட்டது என்றும் வாசுகி இறந்துவிட்டார் என்றும் சொன்னால் வாசுகி என்று சகோதரி யாரும் எனக்கு இல்லை. நான் தாக்கல் செய்துள்ள இறந்த என் தந்தை தங்கவேலின் வாரிசு சான்றிதழ் இந்த வழக்கிற்காக பொய்யாக தாயாரித்துள்ளேன் என்றும் அதனால் தான் அந்த வாரிசு சான்றிதழில் வாசுகியின் பெயர் காணப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உயிலில் உள்ள கையொப்பம் என் தந்தையின் கையொப்பம் என்பதை உறுதிபடுத்த என் தந்தையின் கையொப்பம் அடங்கிய வேறு ஏதாவது ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, காரணம் அதுபோல ஆவணம் எதுவும் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு நான் கொடுக்கவேண்டிய தொகையை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்திலும் 2ம் பிரதிவாதிக்கு சொத்தில் பாகம் கொடுக்ககூடாது என்ற நோக்கத்திலும் இந்த பொய்யான வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றும் இந்த தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.